மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு

அசல் வழக்கு எண். 94/2024

வா.சா. 1 மான்ராஜ்
நாள் 22.09.2025

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

எனக்கு தமிழ் நன்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். 1ம் வாதி பிச்சையம்மாள் எனது மனைவி என்றால் சரிதான். எதற்காக இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எந்த பரிகாரம் கேட்டு இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கான சர்வே எண்கள் குறித்த விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்துக்கான சர்வே எண் என்ன என்றால் 81/7. சொத்துக்கான நான்கு மால் விபரங்கள் மற்றும் அதன் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது ஆவணங்கள் பார்த்தால்தான் தெரியும். எனது மகன் ஜெயக்குமார் எந்த வருடம் இறந்து விட்டார் என்றால் 2005 ஆவது வருடத்தில். என் உடன் பிறந்தவர்கள் மொத்தம் 7 பேர் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்களில் நானும் பரமசிவம் என்பவரும் உயிருடன் உள்ளம் என்றால் சரிதான். எனது அக்கா மகளான 1வது வாதியைத்தான் நான் திருமணம் செய்து உள்ளேன் என்றால் சரிதான். 1வது வாதி திருத்தங்கல் உரை சேர்ந்தவர் என்றால் சரிதான். திருமணம் முடிந்து சுமார் 50 ஆண்டுகளாக திருத்தங்கல் ஊரில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கான முகவரி சான்றுகள் அனைத்தும் திருத்தங்கல் முகவரிதான் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் எனக்கு பூர்வீகமாக பார்த்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் இல்லை என்றும் சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்கு சொத்து எவ்வாறு எனக்கு

பாத்தியப்பட்டது என்றும் எனக்கு உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றும் குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் சரியல்ல.

வத்திராயிருப்பிலிருந்து அழகாபுரி செல்லும் சாலையில் முத்தாலம்மன் கோவிலுக்கு அருகே தெற்கு புறம் தான் வழக்கு சொத்து அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி சொத்தை தவிர வேறு சொத்து எதுவும் எனக்கு அந்த இடத்தில் கிடையாது என்றால் சரிதான். 1970 வருட காலத்தில் எங்கள் ஊருக்கு ஒரே சர்வே நம்பர் தான் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அழகாபுரி டு வத்திராயிருப்பு மெயின் ரோட்டிற்கு வடக்கு பக்கம் உள்ள சொத்துக்கள் எல்லாம் சர்வே எண் 3/1ல் அடங்கியுள்ளது என்றும் தெற்கு பக்கம் உள்ள சொத்துக்கள் எல்லாம் சர்வே எண் 14/1ல் அடங்கி உள்ளது என்றும் சொன்னால் சரிதான். எங்கள் குடும்பத்தில் வழக்கமாக எங்கள் பேருக்கு பின்னால் மணியம் என்று சேர்த்துக் கொள்வது வழக்கம் என்றால் சரிதான் முன்பு சேர்த்துக் கொள்வோம் தற்போது வழக்கத்தில் இல்லை. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் காலத்திலேயே எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் குறித்து நானும் எனது உடன்பிறந்தவர்களும் ஒரு பாகப்பிரிவினை ஆவணம் பிறப்பித்துக் கொண்டோம் என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணம் எனக்கும் எனது உடன்பிறந்தவர்களுக்கும் இடையே ஏற்படுத்திக் கொண்டது உண்மைதான் என்றால் சரிதான்.

மேற்படி பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களைத் தவிர வேறு பூர்வீக சொத்துக்கள் எங்களுக்கு கிடையாது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினையின் அடிப்படையில் எனக்கு எத்தனை சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் இந்த வழக்கு சொத்தையும் சேர்த்து மற்ற இரண்டு சொத்துக்கள் எனக்கு ஒதுக்கப்பட்டன. எனக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்துக்களை கிரையம் செய்து கொடுத்துவிட்டு தான் நான் திருத்தங்களுக்கு சென்று வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை தவிர மற்ற இரண்டு சொத்துக்களையும் நான் விற்பனை செய்து கொடுத்துவிட்டேன். இந்த

வழக்கின் பிரதிவாதிகள் தந்தை மற்றும் மகன் உறவு முறை ஆவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் (பங்காளிகள்) என்றால் முன்பு உறவினர்கள் தற்போது எனக்கு உறவினர்கள் கிடையாது. மேற்படி இந்த வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் தான் சுமார் 12 வருடங்களுக்கும் மேலாக ஆட்டு கொட்டகை வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். 1989 ம் வருடத்திலேயே வழக்கு சொத்தை பொருத்து மாரியம்மாள் என்பவருக்கு ஒரு கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் மாரியம்மாள் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது.

1989 வருடத்திலேயே மாரியம்மாள் என்பவருக்கு வழக்குச் சொத்தை கிரையம் செய்து கொடுத்துவிட்டு தற்பொழுது வழக்கிற்காக மாரியம்மாள் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சொத்துக்கு அருகே உள்ள கோவிந்தராஜ் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மாரியம்மாள் என்பவர் நான் கிரையம் செய்து கொடுத்த சொத்தை கோவிந்தராஜ் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றால் மாரியம்மாள் என்பவர் யார் என்று எனக்கு தெரியாது கோவிந்தராஜனின் எனக்கு தெரியாது. நான் மாரியம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டு மேற்படி மாரியம்மாள் கோவிந்தராஜுக்கு கிரையம் செய்து கொடுத்த விபரத்தையும் தெரிந்து கொண்டு வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்ணில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக நான் சொத்தை மாரியம்மாளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டு, மேற்படி மாரியம்மாள் கோவிந்தராஜுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டு, பின்னர் கோவிந்தராஜ் இந்த வழக்கின் பிரதிவாதிகளிடம் ரூபாய் 50,000 பெற்றுக் கொண்டு அடமான ஆவணம் பிறப்பித்துக் கொடுத்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்ணில் ஏற்பட்ட பிரச்சனையை தீர்ப்பதற்காக என்னிடம் வந்து கேட்டதற்கு நான் சொத்தை பொருத்து எனது மனைவியான 1வது வாதியின் பெயருக்கு கிரையம் செய்து

கொடுத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையில் பிரதிவாதிகள் வழக்குச் சொத்தை குறைவாக கிரையம் கேட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதேபோல வழக்கு சொத்தில் மராமத்து பணிகள் செய்வதற்காக நான் சென்ற பொழுது பிரதிவாதிகள் பிரச்சினை செய்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

சொத்தை காலி செய்ய முடியாது என்ற பிரச்சினை செய்தார்கள். அந்த பிரச்சனை சம்பந்தமாக வத்திராயிருப்பு காவல் நிலையத்திலும் விருதுநகர் மாவட்டம் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி புகார் நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் எனது வழக்கிற்கு எதிராக அமையும் என்பதால் மேற்படி ஏற்படும் ஆவணங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் அனுப்பிய என்னுடைய நகலினை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1வது வாதியின் பெயருக்கு எழுதி வைக்கப்பட்ட கிரைய ஆவணத்தின் அசல் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்தில் ஏன் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அசல் ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். தம்பிபட்டியில் எனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை சுமார் 50 வருடங்களுக்கு முன்பாகவே விற்பனை செய்துவிட்டு எனது மனைவி ஊரான திருத்தங்களுக்கு சென்று வாழ்ந்து வருகிறேன் என்றும் எனக்கு தம்பிப்பட்டியில் எவ்வித சொத்தும் இல்லை என்றும் சொன்னால் சரியில்ல. வழக்கு சொத்தில் தற்போது வரை பிரதிவாதிகள் தான் குப்பை கூளங்கள் மற்றும் ஆட்டு கொட்டகை வைத்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

தற்போது காலியிடமாக தான் உள்ளது. சர்வே எண்ணின் ஏற்பட்ட பிரச்சனையை எனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு எனது மனைவி பெயரை மோசடியாக ஆவணம் உற்பத்தி செய்து கொண்டேன் என்றால்

சரியல்ல. வழக்கு செத்தானது தற்பொழுது காலி மனையாக இல்லை என்றும் பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து தற்பொழுது என்னுடைய அனுபவத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பொய்யான சங்கதிகளை கூறி உண்மைக்கு புறம்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒம்/—எம்.இராமநாதன்/—
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு